இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 16 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 09 – ஞாயிற்றுக்கிழமை 25 ஆகஸ்டு 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 16 : Thiruvalluvar Year - 2055 - Aavani 09 - Sunday 25 August 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2024) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில், தமிழ்நாடு காவல் துறையினரின் அணிவகுப்பினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உடனிருந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2024) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில், தமிழ்நாடு காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உடனிருந்தார்.

## பெண் காவலர்களுக்கு ஓராண்டு மகப்பேறு விடுப்பு! 3 ஆண்டுகள் சொந்த மாவட்டத்தில் பணி !

# காவலர்கள் கடமையை சரியாகச் செய்தால் பாராட்டும் பலனும் தேடி வரும்!

## பதக்கங்களை வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!

**சென்னை, ஆக. 25 -**

**எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் காவலர்களுக்கு விருதுகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில், “பெண் காவலர்களுக்கு ஓராண்டு மகப்பேறு விடுப்பு வழங்கப்படும்” எனவும், “விடுப்பு முடிந்து மூன்றாண்டுகள் சொந்த மாவட்டத்தில் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள்” எனவும், “காவலர்கள் கடமையை சரியாகச் செய்தால் பாராட்டும், பலனும் தேடி வரும்” எனவும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2024) எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில், காவல் துறை சார்பில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

முதலமைச்சர் என்ற முறையில் தினமும் பல்வேறு துறைகள் சார்பில் நடக்கும் நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்கிறேன். இன்று காவல்துறை சார்பாக நடக்கும் விழாவில் பங்கெடுக்கிறேன் என்று சொன்னால் என்னுடைய துறையின் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சி என்பதால், கூடுதல் மகிழ்ச்சியை நான் அடைகிறேன்.

**பதக்கங்களைப் பெற்றுள்ள காவலர்களுக்கு வாழ்த்துகள்!**

எல்லாத் துறைகளும் என்னுடைய துறைகள்தான். இருந்தாலும், காவல்துறையினர் என்னை அதிகம் உரிமை கொண்டாடிக் கொள்ள முடியும் என்பதுதான் உண்மை. என் துறையைச் சேர்ந்த காவலர்கள் பல்வேறு பதக்கங்களை பெற்றிருப்பதை பார்க்கும்போது நான் பதக்கம் வாங்கியது போல எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2024) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில், காவல் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்புப் படை, தடய அறிவியல் துறை ஆகிய துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்.

**இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள்**
**ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் ஆகியவற்றை பெற்றுள்ள காவலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை –

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை

– தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை

– ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்புப் படை

தடய அறிவியல் ஆகிய துறைகளில் பணியாற்றும் காவலர்களுக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

**அரசுக்கு பெருமை சேர்க்கும் காவல் துறை!**

இந்தப் பதக்கங்களுக்குப் பின்னால் இருக்கும் உங்கள் உழைப்பும், திறமையும் தலைவணங்கத்தக்க அம்சமாகும்! தமிழ்நாடு பெருமைமிகு மாநிலமாக திகழ்கிறது என்றால், அந்தப் பெருமையில் தமிழ்நாடு காவல்துறைக்குப் பெரும் பங்கு இருக்கிறது. அமைதியான மாநிலத்தில்தான் வளமும் வளர்ச்சியும் இருக்கும். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலை மிகவும் சிறப்பாக இருப்பதால்தான், தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு, மனித வளர்ச்சிக் குறியீடுகள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. இத்தகைய பெருமையை அரசுக்கு உருவாக்கித் தரும் காவலர்கள் எல்லோருமே பதக்கங்களுக்கு தகுதி படைத்தவர்கள்தான்!

**காவலர்களுக்கு விருதுகள் வழங்கி தொடங்கி வைத்தவர் கலைஞர்!**

சிறப்பாக பணியாற்றும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் பதக்கமும் விருதும் வழங்கிப் பாராட்டுவதை 1969ஆம் ஆண்டு தொடங்கி வைத்தவரே அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். 21.08.1969 அன்று அண்ணா பதக்கங்களை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பதக்கம் கொடுக்கத் தொடங்கி 55 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆண்டுதோறும் அண்ணா பதக்கம் வழங்கப்படுகிறது. காவல்துறை அதிகாரிகள் எல்லாருக்கும் மிகப்பெரிய ஊக்கம் அளிப்பதாக அது அமைந்திருக்கிறது.

**குற்றங்கள் எங்கேயும் யாராலும் நடக்கக் கூடாது. மீறி நடந்தால், உடனடியாக குற்றவாளி கைது செய்யப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விரைவாக தண்டனையை பெற்றுத் தந்தாக வேண்டும். இந்த உறுதிமொழியை நான் மட்டும் எடுத்தால் போதாது காவல்துறையின் உயரதிகாரிகள் மட்டும் எடுத்தால் போதாது ஒவ்வொரு காவலரும் எடுத்தாக வேண்டும். “என்னுடைய காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை நடக்க விடமாட்டேன்” என்று ஒரு காவலர் முடிவெடுத்து விட்டால் குற்றங்கள் பூஜ்ஜியத்திற்கு வந்துவிடும்.**

சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் பணியில் அர்ப்பணிப்போடு செயல்படும் காவல் அதிகாரிகளையும், காவல் ஆளிநர்களையும் நான் மனதார பாராட்டுகிறேன். இது போன்ற பதக்கங்கள் வழங்கப்படுவதும், அதற்காக விழா நடத்துவதும், இதுபோன்ற பதக்கங்களை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற ஊக்கத்தை அளிக்கத்தான்.

**உழைப்பவர்கள் எப்போதும் போற்றப்படுவார்கள்!**

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### 100 நாள் வேலைத் திட்டத்தில்

## கிராம மக்களுக்கு பிரதமர் மோடி துரோகம் !

### அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு !

புதுடெல்லி, ஆக.25-

100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை குறைத்து கிராமப்புற மக்களுக்கு பிரதமர் மோடி துரோகம் செய்துவிட்டதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சரமாரியாக குற்றம் சாட்டியுள்ளார்.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான சட்டம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நிறைவேற்றியது.

இதையொட்டி, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு, நிதியை குறைத்து, வேலை நாட்களை நீக்கினாலும், 13.3 கோடி கிராம மக்களின் வாழ்வாதாரம் இன்னமும் இத்திட்டத்தை சார்ந்தே இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்தில் இருந்து 7 கோடி தொழிலாளர்கள் நீக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ள கார்கே, நிதிநிலை அறிக்கையில் 100 நாள் வேலை திட்டத்திற்கு வெறும் 1.7 சதவிகிதம் மட்டுமே நிதி ஒதுக்கிய அவலத்தையும் எடுத்துரைத்துள்ளார். போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற நிலைக் குழு எச்சரித்துள்ளதை மேற்கோள்காட்டியுள்ள மல்லிகார்ஜுன கார்கே, கிராமப்புற மக்களுக்கு பிரதமர் மோடி செய்துள்ள துரோகத்தின், நினைவுச் சின்னமாக 100 நாள் வேலை திட்டத்தின் தற்போதைய நிலை இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

### பொதுப் பிரிவு மருத்துவப் படிப்பு கலந்தாய்வில்

## எஸ்.சி.- எஸ்.டி. பிரிவினர் பங்கேற்பதை தடுக்க முடியாது!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஆக. 25 -

இதர பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதி திராவிட மற்றும்பழங்குடி இன பிரிவினர், பொதுப்பிரிவு மருத்துவப்படிப்பு கலந்தாய்வில் கலந்து கொள்வதைத் தடுக்க முடியாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 5% இட ஒதுக்கீடு கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது.

ஆனால், எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி. பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் இந்த பிரிவிலும், பொதுப் பிரிவிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்று கூறி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர். கவாய், கே.வி. விஸ்வநாதன் அமர்வு, விசாரித்தது.

பொதுப்பிரிவு என்பது அனைத்துப் பிரிவினருக்கும் உட்பட்டதுதான் என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே தெளிவுபடுத்தியதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இதர பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன பிரிவினர் பொதுப்பிரிவுப் படிப்பு கலந்தாய்வில் கலந்து கொள்வதைத் தடுக்க முடியாது என்று தெரிவித்தனர்.

மெரிட் அடிப்படையில் அவர்கள் தகுதி பெற்றவர்களா இல்லையா என்பதைதான் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், மெரிட் மதிப்பெண் உள்ள அனைத்து மாணவர்களும் பொதுப் பிரிவு கலந்தாய்வில் கலந்து கொள்ள எந்த தடையும் இல்லை என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.